# மாவட்ட ஆட்சியரின் பத்திரிக்கை செய்தி

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் சட்டப்பேரவையில் அறிவிக்கப்பட்டவாறு "சமூகப்பாதுகாப்புத்துறையின் அனைத்து குழந்தைகள் பராமரிப்பு இல்லங்களில் உள்ள, முற்றிலும் ஆதரவற்ற மற்றும் கைவிடப்பட்ட குழந்தைகள், சமூகநலம் மற்றும் சத்துணவுத் திட்டத்துறையின்கீழ் இயங்கும், சமூக நலத்துறை மற்றும் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்ட அலுவலகங்களில் ஏற்படும் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் எல்லைக்கு உட்படாது சி மற்றும் டி பிரிவு பணியிடங்களிலும் மற்றும் சத்துணவுத் திட்டம் மற்றும் அங்கன்வாடி மையங்களில் உள்ள பணியிடங்களிலும் வயது, கல்வி மற்றும் பிற தகுதிகளுக்கு ஏற்ப முன்னுரிமை அடிப்படையில் பணியமர்த்தப்படுவர்" என்ற அறிவிப்பினை நடைமுறைப்படுத்த அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

அவ்வரசாணையின்படி, சமூகப்பாதுகாப்புத்துறை, சமூகநலத்துறை, ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப்பணிகள் திட்ட அலுவலகம், சத்துணவு மற்றும் அங்கன்வாடி மையங்களில் காலியாக உள்ள தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் எல்லைக்கு உட்படாத சி மற்றும் டி பிரிவு பணியிடங்களில் பணியமர்த்த பின்வரும் தகுதியுடையவர்கள் தாங்கள் இறுதியாக கல்வி பயின்ற இல்லங்களுடன் தொடர்பு கொண்டு உரிய சான்றிதழ்களுடன் "ஆணையர், சமூக பாதுகாப்புத்துறை, 300,புரசைவாக்கம் நெடுஞ்சாலை, கெல்லீஸ், சென்னை-600010 என்ற முகவரிக்கு 30.04.2021-க்குள் விண்ணப்பிக்க கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

1. மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் அவர்களால் 1992-ம் ஆண்டில் தொடங்கப்பட்ட தொட்டில் குழந்தைத் திட்டத்தின்கீழ் பெறப்பட்டு தத்துக்குச் செல்லாமல் அரசு இல்லங்களில் வளர்க்கப்பட்ட/வளர்க்கப்பட்டு வரும் குழந்தைகள்
2. தமிழகத்தில் இளைஞர் நீதிச் (குழந்தைகள் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு) சட்டம் 2015-ன் கீழ் பதிவு செய்யப்பட்டு, செயல்பட்டு வரும் அரசு குழந்தைகள் பராமரிப்பு நிறுவனங்களிலுள்ள முற்றிலும் ஆதரவற்ற (தாய் மற்றும் தந்தை அற்றவர்கள்) மற்றும் விடேகிய முற்றிலும் ஆதரவற்ற (தாய் மற்றும தந்தை அற்றவர்கள்) மற்றும் கைவிடப்பட்ட (தாய் மற்றும் தந்தை கண்டறிய இயலாத) குழந்தைகள் இல்லத்தில் அனுமதிக்கப்பட்டபோதோ அல்லது இல்லத்தில் தங்கியிருந்த காலத்திலோ முற்றிலும் தாய் மற்றும் தந்தையரை இழந்தவர்களாகவோ அல்லது கைவிடப்பட்டவர்களாகவோ இருத்தல் வேண்டும்.
3. மேலும், குறைந்தபட்சம் ஐந்து வருடங்கள் அரசு இல்லங்களில் தங்கியிருந்திருக்க வேண்டும்.

இந்த அரசாணை குறித்த முழு விபரங்களை "மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர், மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலகு, விருதுநகர் -626 003, தொலைபேசி எண். 04562 293946 (அல்லது) நன்னடத்தை அலுவலர் சமூக பாதுகாப்புத்துறை விருதுநகர், அலைபேசி எண்.9791459767 (அல்லது) கண்காணிப்பாளர், சிறுவருக்கான அரசினர் குழந்தைகள் இல்லம், மல்லிபுதூர் -626141, திருவில்லிபுத்தூர்-(வ), தொலைபேசி எண்.04563 281539 (அல்லது) கண்காணிப்பாளர், அன்னை சத்யா அரசு குழந்தைகள் இல்லம், தாதம்பட்டி ரோடு, சூலக்கரை, விருதுநகர் - 626003 ஆகிய முகவரியினை தொடர்பு கொண்டு அறிந்துக் கொள்ளலாம்.

மாவட்ட ஆட்சித்தலைவர்
விருதுநகர்.

2/2

Scanned with CamScanner